பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 01 புதன்கிழமை 18.10.2023 கதிர் 341

### குருந்தூர்மலையில் சுற்றியுள்ள 17 ஏக்கரிலும்

# தொல்லியலிடம் இன்றேல் மட்டுமே மக்கள் காணிகள் விடுவிக்கப்படும்

## திணைக்கள அதிகாரிகள் திட்டவட்டம் மாணவர்களை கொண்டு ஆய்வு நடத்துவராம்

(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவு மாவட்டம், குறுந்தூர் மலைப் பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் தொல்லியல் இடங்களாக இல்லாவிட்டால் மட்டுமே விடுவிக்கப்படும் என்று தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம், கொழும்பு, மொரட்டுவை, பெரதேனியா உட்பட 5 பல்கலைக்கழக மாணவர்களை பயன்படுத்தி இந்தப் பகுதியில் ஆய்வுகளை மேற் கொண்ட பின்பே காணி அளவீடு மேற்கொண்டு நில விடுவிப்பு தொடர்பில் முடிவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற கண்காணிப்புக் குழு (ஓவர்சைட் கொமிற்றி) கூட்டத்தில் மக்களின் 17 ஏக்கர் காணிகளை விடுப்பது என்று எடுக்கப்பட்ட ☞ 2

## இனி து ரகசியம் அல்ல!

நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் அரசியல்வாதிகளைத் திருத்துவதற்கு முன்னர் அரச அதிகாரிகளைத்தான் திருத்தவேண்டியிருக்கின்றது. ஏனெனில் சிங்கள பௌத்த பேரினவாத கொள்கையை ஆணித்தரமாக முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் தமிழ், முஸ்லிம் விரோதப் போக்கோடு செயலாற்றுபவர்களாகவும் அவர்களே இருக்கின்றார்கள். ஏனெனில் இன முரண்பாடுகள் ஏற்படும் பல இடங்களிலும் பிரச்சினையைத் தீர்க்க அரசியல்வாதிகளே இணங்கி வந்தாலும் அதிகாரிகள் அதற்கு இடமளிக்காமல் அதனை வளர்த்துச் செல்கிறார்கள். அதிலும் சிங்கள அரசியல்வாதிகளுக்கு முன்பாகத் தலையாட்டி அவர்கள் சொல்லும் தீர்வை ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக்கொண்டுவிட்டுப் பின்னர் அதற்கு தமிழ், முஸ்லிம் விரோதப் போக்கோடு ஒரு வியாக்கியானத்தை முன்வைத்து அந்தத் தீர்வைக் ☞ 2

## 5 சட்டங்களில் சபாநாயகர் கையெழுத்து

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஐந்து சட்டமூலங்களில் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தை யிட்டு சான்றுரைப்படுத்தினார்.

அதற்கமைய, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்), தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்), இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தம்) மற்றும் குடியியல் வான்செலவு (திருத்தம்) ஆகிய ☞ 2

## நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமனம் ஈஸ்டர் விசாரணைக்கு இடையூறல்ல

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்கின்றமை அதன் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாதென ஆளும் தரப்பின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதன் நோக்கமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கும் போதே, ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நாடாளுமன்றம் கூடிய போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதிக்கு கர்தினால் அனுப்பிய கடிதத்தை சமர்ப்பித்ததுடன், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான முன்மொழிவைத் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதென வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய கத்தோலிக்க குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க ☞ 2

## மயிலத்தமடு பண்ணையாளர்களை விக்னேஸ்வரன் நேற்றுச் சந்தித்தார்

மயிலத்தமடு மாதவனை கால்நடை உற்பத்திப் பண்ணையாளர்களை தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று நேரில் சந்தித்துப் பேசினார். அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணங்களின் பிரதிகளையும் பெற்றுக் கொண்டார்.

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் சித்தாண்டியில் 35 நாட்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாகப் போராடி வருகின்ற நிலையில், அவர்களை தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் நேரில் சந்தித்து கலந்துரையாடினார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

பண்ணையாளர்களின் கோரிக்கைகள் மற்றும் அவர்கள் இதுவரையில் அனுப்பிய கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை பெற்றுக் கொண்டுள்ளேன். என்னாலான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன்.

குறிப்பாக, அவர்களின் விடயத்தினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு எடுத்துச்செல்வதற்கு முனையவுள்ளேன். எனினும் கடந்த இரு தினங்களுக்கு முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பண்ணையாளர்கள் தொடர்பில் வழங்கிய கட்டளை இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை - என்றார்.

## பலஸ்தீன தூதருடன் சஜித் நேற்று சந்திப்பு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் கிளர்ச்சியாளர்களுக்கு இடையிலான போரால் பலஸ்தீனத்திற்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர், பலஸ்தீன தூதுவருடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, ஏற்பட்டுள்ள மோதலை பேச்சு ஊடாகத் தீர்த்துக்கொள்வது, இருநாட்டு மக்களினதும் உயிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மிக முக்கியமானதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இருநாடுகளினதும் தலைவர்கள் நிரந்தர அமைதிக்காக ஒன்றிணைய வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியதோடு, போரினால் உயிர்களையும் குடும்பங்களையும் இழந்த இருநாடுகளினதும் பொது மக்களுக்காக தமது அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்தார்.

## நாடாளுமன்றை ஆளும் தரப்பு கட்சி அலுவலகமாக்கி விடாதீர்

### லக்ஷ்மன் கிரியெல்ல சீற்றம்

நாடாளுமன்றத்தை கட்சி காரியாலயமாக்கவோ கச்சேரியாக்கவோ வேண்டாமென எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று காலைக் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளின் போது சபாநாயகர் அறிவிப்பை சபாநாயகர் முன்வைத்தார்.

இதன்போது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் உரையாற்றுவதற்குப் போதுமான நேரம் வழங்குவதற்கும், நேர முகாமைத் ☞ 2

## எம்.பிக்களை அச்சுறுத்தும் வகையில் பாதுகாப்புச் செயலர் நடந்துகொண்டார்

### நாடாளுமன்றில் நளின் பண்டார முறைப்பாடு

பாதுகாப்பு செயலாளர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளும் போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்து கொண்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புச் செயலாளர் நாடாளு மன்றத்துக்கு அடிக்கடி வருகைதருகிறார். ☞ 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக்கு மீண்டும் தெரிவுக்குழு அமைக்க யோசனை

### நாடாளுமன்றில் பெரமுன எழுத்து மூலம் கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை மீண்டும் நியமிக்குமாறு யோசனை முன்வைத்து ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட தெரிவுக்குழுவை நியமிப்பது தொடர்பான யோசனையை முன்வைத்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் உதயகாந்த குணதிலக்க அதனை வழிமொழிந்தார்.

11 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் பொதுஜனபெரமுனவின் ☞ 8

## தெரிவுக்குழு உறுப்பினர்களாக கட்சித் தலைவர்கள் வேண்டாம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக மீண்டும் தெரிவுக்குழு அமைக்கப்படுவதாக இருந்தால் அதன் உறுப்பினர்களாக கட்சித் தலைவர்களை நியமிக்க வேண்டாமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த விசேட கூற்றினைத் தொடர்ந்து ஏற்பட்ட விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக ஏற்கனவே நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அந்தத் தெரிவுக்குழுவானது விசாரணைகளை மேற்கொண்டது. என்னை இலக்கு வைத்து பழிசுமத்தும் வகையில் அந்த ஆணைக்குழு செயற்பட்டது.

அதேநேரம், ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

குழப்பியடித்துவிடுகிறார்கள் அரச அதிகாரிகள்.

நேற்று குருந்தூர்மலையில் நடந்திருக்கக்கூடிய அதிகாரிகளின் களஆய்வுப்பயணம்இதனைத்தான் குறிக்கின்றது. குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஐயனார் ஆலயம் இருந்தது என்கிறது தமிழர் தரப்பு. இல்லை அது பௌத்த வழிபாட்டிடம் என்கிறதுதொல்லியல்திணைக்களம். அங்கேஇருந்ததுஇந்துஆலயத்தின் எச்சங்கள் என்பதற்கான அறிவிப்பு வவுனியா செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், தொல்லியல் திணைக்களத்தின் சமீபத்திய ஆய்வுகளோ அந்த இடத்திற்கும் சைவ சமயத்திற்கும் எந்தவிதத் தொடர்புகளும் இல்லை என்ற வகையிலேயே அமைந்திருந்தன.

இந்தப் பகுதியில் பௌத்தம் வருவதற்கு முன்பே ஒரு வழிபாட்டுமுறை இருந்திருப்பதும் பௌத்தத்தின் வருகையாலும் அரசர்களிடமிருந்து அதற்குக் கிடைத்தஆதரவாலும்பௌத்தத்திற்கு முன்பான வழிபாடுகள் பௌத்த செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கும் என்பதையும் வரலாற்றைப் புரிந்த எவரும் உணர்ந்துகொள்வது சிரமமல்ல. அப்படிப்பட்ட நிலையில், குருந்தூர்மலை விடயத்தில் பௌத்தத்தைத் தாண்டிய ஒரு பார்வையை கோணத்தை முன்னெடுக்கவே அதிகாரிகள் தயாராக இல்லை. இது முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கிறது.

தொல்லியல் இடங்களில் மட்டுமல்ல அதனைச் சுற்றியுள்ள 400 மீற்றர் பகுதிக்குள்ளும் வேறு கட்டுமானங்களை மேற்கொள்ளக்கூடாது என்ற விதி உண்டு. இருந்தாலும் குருந்தூர்மலையில் தொல்லியல் இடத்தின் மீது விகாரை அமைப்பதற்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் அங்கு சிவன் கோயில் அமைப்பதற்கு மட்டும், தொல்லியல்இடங்களில்அத்தகைய அனுமதியைத் தரமுடியாது என்கிறார்கள். அப்படியென்றால் விகாரைக்கு மட்டும் எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்கிற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. அதுமட்டுமில்லை, நீதிமன்ற உத்தரவை மீறி அங்கு விகாரை அமைக்கப்பட்டதையும்கூட இந்த அதிகாரிகள்அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், சிவன் கோயில் அமைக்க முன்கூட்டி அனுமதி கேட்டால் அதற்கு மறுக்கிறார்கள். விதிகளைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். இதுபோன்ற பாரபட்சங்கள்தான், இன ரீதியான நடவடிக்கைகள்தான் இந்த நாட்டில் இனப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்குகின்றன.

குருந்தூர்மலை விவகாரத்தில் நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுவின் (ஓவர்சைட் கொமிற்றி) கூட்டத்தின்போது இதே அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்கு முன்பாக தீர்வுக்கு ஒத்துழைப்பது போன்று நடித்துவிட்டு, பின்னர் அரசியல் தலைவர்களின் உத்தரவுகளையும் உதாசீனப்படுத்திச் செயற்படுகின்றார்கள். இதன் மூலம் எரியும் இனப்பிரச்சினைக்கு நெய்வார்த்து வருகின்றார்கள்.

அரசியல்வாதிகளைக்கூட ஒரு கட்டத்தில் ஓர் இணக்க நிலைக்குக்கு கொண்-டுவந்துவிடலாம், ஆனால் இவ்வாறு கள்ளத்தனம் செய்யும் அதிகாரிகளைத் திருத்தவே முடியாதோஎன்றுதோன்றுகின்றது. அவர்களைத்திருத்த முடியாதவரை இனப்பிரச்சினையும் தீராது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தொல்லியலிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்கு மாறாக, தற்போது புதிய நிபந்தனைகளை விதித்துள்ளனர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள குருந்தூர்மலைக்கு புத்தசாசன அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள உயர் அதிகாரிகள் நேற்று திடீரென வருகை தந்து நிலமைகளைப் பார்வையிட்டனர். அப்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இந்தக் களப்பயணத்தின்போது முல்லைத்தீவு மாவட்டச்செயலரும் உடனிருந்தார். பொதுமக்களின் 17 ஏக்கரை விடுவிக்குமாறும் சிவன் ஆலயத்தை மக்கள் வழிபாட்டிற்குவிட வேண்டும் என்பதே இப் பகுதி மக்களின் கோரிக்கை என அவர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

அதற்கு நில உரிமம் தொடர்பிலான ஆவணங்களைக் கட்டாயம் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவித்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், அவை தொல்லியல் இடங்களா இல்லையா என உறுதி செய்ய யாழ்ப்பாணம், கொழும்பு, மொரட்டுவை, பெரதெனியா உட்பட 5 பல்கலைக் கழக மாணவர்களைப் பயன்படுத்தி ஆய்வினை மேற்கொண்டு அதன் பின்பு அளவீட்டினை மேற்கொண்டே நில விடுவிப்பு தொடர்பில் நிர்ணயம் செய்யமுடியும்என்றுதிட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுவில், குருந்தூர்மலையில் பௌத்த மற்றம் சிவன் ஆலயங்களிற்காக 3 ஏக்கர் நிலத்தை விடுவிப்பது என்று முடிவெடுத்து அதற்கான நிலத்தை விடுவிக்க வனவளத் திணைக்களத்திடம் கோரவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த 3 ஏக்கர் நிலத்தையும் தொல்லியல்த் திணைக்கள எல்லைக்கு வெளியிலேயே விடுவிப்பதாகவும் மலைப் பிரதேசத்தில் 3 ஏக்கரை வழங்க முடியாது எனவும் தொல்லியல்த் திணைக்களப் பணிப்பாளரால் நேற்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரின் இந்த முடிவுக்கு உடனடியாகவே குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகிகள் மற்றும் பக்தர்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் இந்த நிபந்தனையை விதிப்பதன் மூலம் சிவன் ஆலயம் அமைக்க மலைக்கு வெளியில் நிலம் வழங்கப்படும் எனபதே இதன் முடிவானால் மலையில் இருக்கும் விகாரையினைவிட மேலும் ஒரு விகாரை அமைப்பதற்கே திட்டமிடுகிறார்கள் என்று அவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

ஐயனார்ஆலயம்அமைந்திருந்த இடத்தில் விகாரையை அமைத்துவிட்டு, இப்போது அங்கு சிவன் ஆலயம் அமைக்க விடமாட்டோம் என்றால் அதில் என்ன நியாயம் இருக்கிறது? அதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ் ஆய்வில் புத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, ஜனாதிபதிசெயலகவடமாகாண இணைப்பாளர் எஸ்.இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட மேலதிகச் செயலாளர்கள் கனகேஸ்வரன், குணபாலன் மற்றும் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள உயர் அதிகாரிகள், வனவள திணைக்கள உயர் அதிகாரிகள், வன உயிரிகள் திணைக்கள உயர் அதிகாரிகள், காணி தொடர்பிலான திணைக்கள உயர் அதிகாரிகள். கமநலசேவை திணைக்கள உயர் அதிகாரிகள், விவசாய திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் குழுவினருடன் ஒரு பொது மகனும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். தமது 17 ஏக்கரை நிலத்தையும் விடுவித்து மலைப் பகுதியில் சிவன் ஆலயம் கட்ட அனுமதிக்கப்படாத வரையில் முன்வைக்கப்படும் எந்தவொரு தீர்வினையும் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

## 5 சட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலங்களை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்.

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டம், 2023ஆம்ஆண்டின்21ஆம்இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2023 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பு சட்டம், 2023 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தம்) சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க குடியியல் வான்செலவு (திருத்தம்) சட்டம் ஆகிய சட்டங்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வருகின்றன.

## தெரிவுக்குழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல்கள் பற்றி விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு விசேடமான கோப்புக்களை ஜனாதிபதி கோட்டாபயவிடத்தில் வழங்கியுள்ளது. அக்கோப்புக்களில் உள்ளவிடயங்கள்என்னஎன்பதைப் பகிரங்கப்படுத்தப்படவேண்டும் - என்றார்.

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியது என் பொறுப்பு.

விசாரணை தொண்ணூற்றொன்பது சதவீதம் முடிந்துவிட்டது என்ற கதையை கத்தோலிக்க குழு நிராகரிக்கிறது. இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுமீதுநம்பிக்கைஇல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தெரிவுக் குழுவை நாம் ஏற்கவேண்டுமாயின், அதன் தலைவர் பதவியை பரிந்துரை செய்வதை எங்களிடம் விட்டு விடுங்கள். முன்மொழியப்பட்ட குழுவின் அமைப்பை சமநிலைப்படுத்துங்கள். இல்லையெனில் எங்களால் இதில் பங்கேற்க முடியாது.

அன்பிற்குரிய கத்தோலிக்க ஆயர் கர்தினாலின் முடிவின் அடிப்படையில் இதில் பங்கேற்பதா வேண்டாமா என்ற முடிவை எடுப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இதற்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தெரிவுக் குழு மீது எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தன. மற்ற சோதனைகளுக்கு இடையூறுவிளைவிக்கும்வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை.

கர்தினால் வழங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கையளித்தார். உண்மைகள் காரணமாக இந்த நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழுவோ அல்லது உறுப்பினர்களோ அந்த விசாரணையை மேற்கொள்ள முடியாது.

பாதுகாப்புப் படையினரும் அது தொடர்பான நிறுவனங்களும் இதனை நியமிப்பது அதற்குத் தடையாக இருக்காது. அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பானவிவாதம்இடம்பெற்றதாக நான் நம்புகிறேன்.

முதலில்நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவின் வளர்ச்சி குறித்து பேசினர். அதுபற்றி விவாதிக்க இந்தத் தெரிவுக் குழுவுக்கு வாய்ப்பு உள்ளது. இது ஒரு தடையாகவோ அல்லது விசாரணையாகவோ இருக்க நாங்கள் விரும்பவில்லை. எனவே, நாங்கள் உங்கள் நிலைப்பாட்டில் இருந்து இதைப் பற்றி பேசுகிறோம். நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தின் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் ஆவணங்களை முன்வைக்க முடியும் என நினைக்கின்றேன்.

ஏனெனில்அந்தவிவாதத்தில்சில எம்.பி.க்கள் புதிய விஷயங்களை முன்வைத்த காலங்கள் உண்டு, நமக்குத் தெரியாத விஷயங்கள், ஒருவேளை அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடும். எனவே, தேர்வுக் குழு நியமனம் மூலம், மற்ற விசாரணைகள் தடைபடாது.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சமர்ப்பித்தார். அதுபற்றி நாட்டுக்கு வந்த பிறகு பதில் அளிப்பார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எமது அனைவரினதும் நிலைப்பாடு இதனை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். அந்தச் சோதனைகளுக்கு இது ஒரு தடையாக நான் நினைக்கவில்லை என்றார்.

# வட,கிழக்கு அடைப்புக்கு தமிழ் அரசு முழு ஆதரவு

### பேச்சாளர் சுமந்திரன் அறிவிப்பு

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 20ஆம்திகதிமுன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சி முழு ஆதரவு வழங்கவுள்ளதாக அக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு வழங்கியுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவுமாவட்டநீதிபதியும் நீதவானுமானரி.சரவணராஜா, தனது நீதித்துறை கடமைகளை செய்த காரணத்தினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு பதவியைத் துறந்து நாட்டை7 விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டதை எதிர்த்து ஒக்டோபர் 20 வடக்கு கிழக்கில் நடக்கவுள்ள முழு அடைப்பில்பங்கேற்குமாறுஇலங்கைதமிழ் அரசுக் கட்சி சார்பில் அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.தமிழ் நீதிபதி ஒருவருக்கு நிகழ்ந்த இந்த மிக மோசமான செயற்பாட்டை இந்த அடைப்பு நடவடிக்கை மூலம் திரும்ப திரும்ப உலகுக்கு எடுத்தக் காட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே இது சம்பந்தமாக அனைவரினது ஒத்துழைப்பையும் முழுமையாக எதிர்பார்க்கிறோம் என்றுள்ளது.

# நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை எதிர்த்து 34 வழக்குகள் தாக்கல்

நிகழ்நிலைக் காப்பு எனும் சட்டமூலம் தொடர்பாக 2023 ஒக்டோபர் 4 மற்றும் 06 ஆகிய நாள்களில் சபாநாயகரினால் அறிவிக்கப்பட்ட நான்கு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசமைப்பின் 121(1) ஆம்உறுப்புரையின்பிரகாரம்,உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் முப்பது மனுக்களின் பிரதிகள் தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார்.

இதன்பிரகாரம், தற்போது நிகழ்நிலைகாப்புச்சட்டத்திற்குஎதிராக 34 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, கர்த்தினால் ரஞ்சித் ஆண்டகை, சட்டத்தரணிகள் சங்கம், ஐக்கிய மக்கள் சக்தி, இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட முக்கிய அமைப்புக்கள் இந்த மனுக்களைத்தாக்கல்செய்துள்ளன.

சமூக ஊடகங்களில் அவதூறுகள், பொய்ச்செய்திகள் பரப்புவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தைக் கொணடுவருவதற்குஆட்சியாளர்கள் முயல்கின்றனர். அது தொடர்பான சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சட்டமூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும், கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான மிலேச்சத்தமான முன்மொழிவு என்று கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

# காலத்தை இழுத்தடிக்கும் உத்தியே தெரிவுக்குழு அமைக்கும் முயற்சி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுஅமைப்பதுகாலத்தைஇழுத்தடிப்பதற்கானஉத்திஎன்றுநாடாளுமன்ற உறுப்பினர்கோவிந்தன்கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகின்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்--4 காணொளி வெளியிட்ட விடயங்கள் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றைநியமிக்கும் யோசனை ஆளும் தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

உண்மையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுஅமைக்கப்படுவதற்கான யோசனையின் நோக்கம் என்ன? உண்மைகளைக் கண்டறிவதற்காகவா இல்லை காலம் கடத்துவதற்காகவா? விசாரணை என்ற போர்வையில் உண்மைகளை மூடிமறைப்பதற்காகவா? எனக்குள் ஐயம் எழுகின்றது.

கடந்த காலத்தில் எமக்குள்ள அனுபவத்தின் பிரகாரமும், ஆட்சியாளர்களின்செயற்பாடுகளின் படியும், இவ்வாறான குழுக்களை நியமிப்பதானது காலத்தினை இழுத்தடிப்பதற்கான செயற்பாடு என்பதை அனைவரும் இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புக்கள், எதிர்க்கட்சிகள், சர்வதேச தரப்புக்கள் அழுத்தங்களை பிரயோகிக்கின்றபோது குறித்த விடயம் சார்ந்துகுழுவைஅமைத்துஅறிக்கை சமர்ப்பிப்பதையே ஆளும் தரப்பு முன்னெடுத்து வந்துள்ளது.

அதேநேரம், ஆளும் தரப்பு உருவாக்குகின்ற குழுக்கள் அறிக்கையைசமர்ப்பித்ததாகஊடகங்களில் செய்திகள் வெளியாகும். அதன் பின்னர் அந்த விடயம் அடியோடு மறைக்கப்பட்டுவிடும்.அந்தஆணைக் குழுக்களின்பரிந்துரைகளைவைத்து எந்தவொரு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை-என்றார்.

## எம்.பிக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்துக் கொள்கிறார். ஆகவே அவர் கலந்துக் கொள்ளும் தெரிவுக்குழு கூட்டத்தில் நாங்கள் பங்குப்பற்றும்போது எமது மெய்பாதுகாவலர்களை தெரிவுக்குழு அறைக்குள் உட்பிரவேசிக்க அனுமதி வழங்க வேண்டும், ஏனெனில் பாதுகாப்பு செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளரின் செயற்பாட்டினால் நாடாளுமன்ற உறுப்பினரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே இச்சம்பவம் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம் - என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, நாட்டுமக்களின்வரிப்பணம்மோசடி செய்யப்படுவதுதொடர்பில்பாதுகாப்பு செயலாளர் கலந்துகொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஒருசில விடயங்களை குறிப்பிட்டேன்.

அதனை தொடர்ந்து தெரிவுக் குழுவில் வைத்து எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனால் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. பாதுகாப்பு செயலாளர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் குறிப்பிட்ட கருத்துக்கள் அடங்கிய குரல் பதிவை வெளியிடுமாறுதொடர்ந்துவலியுறுத்துகிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு. எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் நீங்கள் அனைத்து நாடாளுமன்ற சம்மேளனத்தில் எவ்விடயம் பற்றி உரையாட போகின்றீர்கள் - என்றார்.

# பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு கூட்டிணைவினூடாக பரந்துபட்ட பொருளாதாரச் சந்தைக்குள் பிரவேசிக்கலாம்

## ஜனாதிபதி ரணில் வியூகம்



பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு கூட்டிணைவில் இணைவதன் மூலம் இலங்கையால் மிகப்பெரும் பொருளாதார சந்தைக்குள் பிரவேசிக்க முடியும் எனவும், இதனூடாக சீனாவுடன் மாத்திரமன்றி, ஏனைய பல நாடுகளுடனான பொருளாதாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீன அரச தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் ஜனாதிபதி ரணில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

**கேள்வி:** நீங்கள் குறித்த ஒரு தரப்பைஆதரிப்பதற்குஎதிரானவராக இருக்கின்றீர்கள். அதேவேளை குறிப்பாக பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு கூட்டிணைவில் இணைவதற்கும், பிராந்திய பொருளாதாரஒத்துழைப்பைவலுப்படுத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளீர்கள். பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பில் இலங்கையின் வகிபாகம் எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**பதில் :** நாம் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையில் இணைவதன் மூலம் உலகின் மிகப்பெரும் பொருளாதார சந்தைக்குள் பிரவேசிக்கமுடியும். தெற்காசியாவில் வர்த்தக வலயமொன்று உருவாகும் என நாம் முன்னர் எதிர்பார்த்தோம். இருப்பினும், தெற்காசியாவில் வர்த்தக வலயம் உருவாகாது. எனவே, பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு கூட்டிணைவில் இணைந்து, அதில்அங்கம்வகிக்கும் நாடுகளுடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேண வேண்டும்.

சீனாவுடன் மாத்திரமன்றி சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுடனும்தொடர்பைப்பேணவேண்டும்.

இலங்கையின் பௌத்த மதம் தான் தாய்லாந்து, மியன்மார், லாவோஸ், கம்போடியா போன்ற நாடுகளில் இருக்கிறது. அதேபோன்று சீனா, ஜப்பான், தென்கொரியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடனான எமது தொடர்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வதற்கும் அம்மட்டத்துக்கு செல்வதற்கும் நாம் மிகவும்போட்டித்தன்மைவாய்ந்த, வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலம் உலகின் அனைத்து பாகங்களையும் போட்டித்தன்மையுடன்எட்டுவதற்குஎம்மால்முடியும். அதனூடாக அனைத்து பிராந்தியங்களிலும்எமக்கானசந்தைகளை உருவாக்கிக்கொள்வதற்கும், முதலீடுகளைஉள்ளீர்த்துக்கொள்வதற்கும் முடியும்.

**கேள்வி:** சில மேற்குலக நாடுகள் பொருளாதாரம் சார்ந்த வற்புறுத்தல்களை மேற்கொள் வதாகவும், நலிவுற்ற பொருளாதார நிலைவரத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவதானது பிராந்திய பொருளாதார மேம்பாட்டைபாதிக்கும்எனவும்நீங்கள் அண்மையில் கூறியிருந்தீர்கள். அவ்வாறான 'பொருளாதார வற்புறுத்தலால்' இலங்கை பாதிக்கப்பட்டிருக்கிறதா?

**பதில் :** இலங்கையின் வர்த்தகக் கொள்கை கடந்த 20 - 25 வருடங்களில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் ஏனைய நாடுகளுடன் எமது வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்வதில் காணப்பட்ட பெருமளவான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

பொருள்கள் மற்றும் பணத்தைப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அது தெற்காசியாவுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்ததுடன், அதன் மூலம் அபிவிருத்தி ஏற்பட்டது.

எனவே இப்போது இம்முறைமையை நிறுத்தவேண்டும் என்று கூறினால், அத்தீர்மானத்தை நாம் அனைவரும் மேற்கொள்ளவேண்டும். மாறாக, இதனை நிறுத்துமாறு மேற்குலகின் ஒருசில நாடுகளால் மாத்திரம் கூறமுடியாது.

அமெரிக்கா, ஐரோப்பாவிலும் கூடஅதற்குஎதிரானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது உலக வர்த்தக அமைப்பினாலேயே தீர்மானிக்கப்பட்டது. அதில்ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்வதாக இருந்தால் நாம் அனைவரும் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டும். - என்றார்.

(05)

# இஸ்ரேல் - பலஸ்தீன் மோதலை கண்டித்து மட்டக்களப்பில் திங்களன்று போராட்டம்



இஸ்ரேல் -பலஸ்தீன மோதலை முடிவுக்கு கொண்டுவந்துஅப்பகுதியில் அமைதியை நிலை நாட்டுமாறு கோரி மட்டக்களப்பில் திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள்நினைவுத்தூபிக்கு முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது இஸ்ரேல் -பலஸ்தீன மோதல் காரணமாக தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்கும் நிலைமையினை தடுப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இஸ்ரேல் - பலஸ்தீனம் எனும் இருநாடுகளுக்கும் இடையில்சமாதானம்வரவேண்டும்என்றும் இனம், மதம், மொழி ஒற்றுமையினை சர்வதேச நாடுகள் உருவாக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாடுகள் இரு நாடுகளுக்கும் ஆயுதங்கள் வழங்குவதை விடுத்து யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கவேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு முன்வைக்கப்பட்டது. இவை தொடர்பாக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (05)

# அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் தரப்புக்கே தேர்தல் தேவை

## மனுஷ நாணக்கார சாடுகிறார்



அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் தரப்பிற்கே தற்போது தேர்தல் அவசியமாக இருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் உண்மையில் தேர்தல் ஒன்றைக் கோருகிறார்களா என்ற கேள்வி எழுகிறது. மக்கள் தேர்தலை அன்றி, வரிசை யுகத்தை இல்லாது செய்துபொருளாதாரத்தைப்பலப்படுத்த வேண்டும்என்றேகோரியிருந்தார்கள்.

இதனை நாம் நிவர்த்தி செய்து வருகிறோம். ஆனால், தற்போது தேர்தலைகோருவதோஅதிகாரத்துக்கு வரத்துடிக்கும் தரப்பாகும்.

இவர்களின் வேண்டுகோளை விட, எமக்கு மக்களின் உயிரே முக்கியமாகும்.

நாட்டு மக்களுக்கு நிம்மதியாக சுவாசிக்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

அதேபோல, அவர்களின் வாக்குரிமையையும் நாம் பாதுகாப்போம். இது தொடர்பாக யாரும் அச்சப்படத் தேவையில்லை. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# ஆட்சியாளரைத் தெரிவுசெய்ய மக்களுக்கு உரிமையுள்ளது

## சாகர காரியவசம் தெரிவிப்பு



தேர்தலைப் பிற்போடும் நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன இல்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன என்ற வகையில், நாம் தேர்தலை பிற்போட இடமளிக்கப் போவதில்லை. உரிய காலத்திலோ அல்லது அதற்கு முன்போ தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

ஜனநாயக நாட்டில், தங்களுக்குத் தேவையான ஆட்சியாளரைத் தெரிவு செய்யவும் தங்களின் கருத்துக்களை வெளியிடவும் மக்களுக்கு முழு உரிமையுள்ளது.

இந்த உரிமையை இல்லாது செய்ய எந்தத் தரப்பினர் முற்பட்டாலும், நாம் அதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை.

எனவே, எந்த காரணத்தைக் கொண்டும் தேர்தலை பிற்போடும் நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன இல்லை என்பதை கூறிக்கொள்கிறோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு குறித்த வழிகாட்டல்கள் வெகுவிரைவில் வெளியீடு

## ஆணைக்குழு உத்தேசம்

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமொன்றை வெளியிடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், சிவில்சமூகசெயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனிய தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஆணைக்குழுவின்உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் ஃபர்ஸானா ஹனீபா, நிமல் புஞ்சிஹேவா மற்றும் கலாநிதி ஜெஹான் குணதிலக ஆகியோரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது நாட்டின் ஜனநாயக மற்றும் சிவில் இடைவெளிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அவர்களது பணியுடன் தொடர்புபட்ட வகையில் அடக்குமுறைகளுக்கும் மீறல்களுக்கும் உட்படுத்தப்படல், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் விசேட தேவையுடையோர்முகங்கொடுத்துவரும்சவால்கள்உள்ளடங்கலாக அண்மையகால அச்சுறுத்தல் நிலைவரம் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது அனுபவங்களைப்பகிர்ந்துகொண்டனர். அதேபோன்று இவ்விடயங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றுவதற்கு தாம் கொண்டிருக்கும் ஆர்வம் குறித்தும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

மேலும் கடந்தகால அறிக்கைகள் உள்ளிட்டதகவல்களின்செயற்திறனான வெளிப்படுத்தல்களின் அவசியத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம்வலியுறுத்தியசிவில் சமூகப்பிரதிநிதிகள், ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கும் செயன்முறை மற்றும் அவசர தொலைபேசி சேவை என்பன வலுப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினர்.

இவற்றுக்குப் பதிலளித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும்வெளியிடுவதற்குத் தாம் திட்டமிட்டிருப்பதாகவும், அவை தொடர்பில்பரந்துபட்டகலந்துரையாடல் செயன்முறையில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும்தெரிவித்தனர்.

(05)

# மன்னார் தென்கடல் பகுதியில் இறந்து ஒதுங்கும் ஆமைகள்

*மன்னார் தென்கடல் பகுதியில் கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்கி வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்ததை தொடர்ந்து, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த இடத்துக்கு சென்று உயிரிழந்த ஆமைகளை பார்வையிட்டுள்ளனர்.*

*கடந்த மூன்று தினங்களாக மன்னார் தென்கடல் பிராந்தியத்தில்அதிகமானகடல்ஆமைகள் இறந்து கடலில் மிதந்து வருவதாகவும், அதிகமான ஆமைகள் இறந்த நிலையில் மன்னார், சிலாவத்துறை கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கி வருவதாகவும் அப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கூறுகின்றனர். இது தொடர்பாகவனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அதிகாரிகள் நேற்று (திங்கட்கிழமை) அப்பகுதிக்கு சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் சீர்திருத்தத்தின் பின்னணி என்ன?

கடந்த ஒரு வார காலமாக தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. குறிப்பாக இந்த விடயம் தொடர்பில் எதிர்க் கட்சிகள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றன. நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது தொடர்பில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் கலந்துரையாடியுள்ளனர் என்றும், இதற்கான சட்டத் திருத்த வரைபை அமைச்சரவையில் முன்வைக்குமாறு அரசுத் தலைவர் பணித்துள்ளார் என்றும் செய்திகள் வெளியானதைத் தொடர்ந்தே இந்தச் சர்ச்சை வெடித்தது.

மாகாண சபைத் தேர்தல்கள் கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக நடத்தப்படாமல் இருக்கும் நிலையில், போதிய பணம் இல்லை என்பதைக் காரணமாகக் காட்டி உள்ளூ–ராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பதற்கான முயற்சியும் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் அரசுத் தலைவர் தேர்தலை நடத்தவிடாமல் செய்வதற்கான முயற்சிதானோ என்கிற சந்தேகங்களைக் கிளப்பியள்ளது.

2024 நான்காம் காலண்டில் அரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டியிருக்கும் நிலையில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழித்து நிறைவேற்று அதிகார தலைமை அமைச்சர் [பிரதமர்] முறையை அறிமுகப்படுத்த ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார் என்பதே செய்தி. அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதை நன்குணர்ந்து இருப்பதால் அவர் இந்த முயற்சிக்குள் திடீரெனக் குதித்துள்ளாரா என்கிற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. எனினும் இதற்கு முன்னரே இந்த நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறை ஒழிக்கப்படவேண்டும் என்று ஏற்றுக்கொண்டிருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. 2010, 2–015 மற்றும் 2019 தேர்தல் காலங்களில் அவர் இதற்கு ஆதரவாகவே இருந்திருக்கிறார்.

இருப்பினும் இன்று அந்த அதிகாரக் கதிரையில் அமர்ந்தபடி அதன் அதியுச்ச அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருப்பவர் என்கிற வகையில் அதனை ஒழிப்பதற்கு அவர் உண்மையிலேயே முயற்சி எடுப்பாரா என்கிற சந்தேகம் மக்களிடம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அது தற்போதைய நிலையில் சாத்தியமானதா என்கிற கேள்வியும் இந்தச் சந்தேகத்திற்குக் காரணம்.

ரணில்விக்கிரமசிங்கவுக்குநாடாளுமன்றத்தில்சொந்தக்கட்சி ஆதரவுகிடையாது. பொதுஜனபெரமுனவின்ஆதரவில்தான்அவர் தங்கியிருக்கிறார். இரண்டு முன்னாள் அரசுத் தலைவர்களைக் கொண்டிருக்கக்கூடிய அந்தக் கட்சி, இன்றில்லாவிட்டாலும் நாளை மற்றொருவரை அரசுத் தலைவராக்க முடியும் என்று நம்பும் அந்தக் கட்சி நிறைவேற்று அரசுத் தலைவர் –முறையை ஒழிக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவுக்கு ஆதரவளிக்குமா என்பதே மிகப் பெரும் கேள்வி.

முன்னாள் அரசுத் தலைவர் –சந்திரிகா குமாரதுங்க உட்பட –– பல்வேறு மைத்திரிபால சிறிசேன ஈறாகப் பலரும் அரசுத் தலைவர் வேட்பாளராக இருந்தபோது நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பார்கள் என்றே மக்களுக்கு வாக்குறுதி வழங்கி வெற்றிபெற்றார்கள். ஆனால் அவர்களின் ஆட்சிக் காலங்களில் அவர்களால் அந்த முறைமை அழிக்கப்படவேயில்லை. தமது உறுதி மொழிகளை அவர்கள் காப்பாற்றியதில்லை.

நிறைவேற்று அரசுத் தலைவராக வருவதற்கான கனவோடு காத்திருக்கும் சஜித் பிரேமதாஸ மற்றும் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் இந்த மாற்றத்தை, முறைமை ஒழிப்பை ஏற்றுக்கொள்வார்களா? தேர்தல் சீர்திருத்தம் குறித்த செய்தி வெளியானதுமே, இதுவும் அரசுத் தலைவர் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கான முயற்சி என்றே அவர்கள் கண்டனம் தெரிவித்தனர். அது ஒழிக்கப்படவேண்டியதுதான், அப்படி நடந்தால் அதற்குத் தாம் ஆதரவு வழங்குவோம் என்று அவர்கள் கூறவில்லை.

இவர்களில் எவரும் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் ஆதரவைப் பெற்று வெற்றிபெறக்கூடியவர்கள் என்கிற கருத்துக்கணிப்புக்கள் இதுவரையில் இல்லை. சராசரியாக 30 சதவீத ஆதரவையே இவர்கள் பெறுவார்கள் என்று கணிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட நிலையில் எதிர்காலத்தில் அவர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்பதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது என்றாலும், இப்போதைக்கு இந்த நிறைவேற்றதிகார ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று தோன்றவில்லை.

நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமையிலிருந்து நிறைவேற்று தலைமை அமைச்சர் முறைக்கு மாறுவது என்பது அடுத்த சில மாதங்களுக்குள் சாத்தியமா என பொதுக்களும் கேள்வி எழுப்புகின்றனர். அத்தகைய ஒரு முயற்சியின் சாத்தியத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள கால அளவு, தேர்தலை மீண்டும் ஒருமுறை ஒத்திவைக்கும் தந்திரமாகும் என்றும் ஊழல்வாதிகள் தேர்தலைச் சந்திக்காமலேயே அதிகாரத்தில் தொடர, பதவிகளில் நீடிக்க மேற்கொள்ளும் ஒரு தந்திரம் என்றே பலரும் கருதுகின்றார்கள்.

சரியான நேரத்தில் தேர்தலை நடத்துவது மக்களின் அடிப்படை உரிமையாகும். பல்வேறு காரணங்களை கூறி தேர்தலை ஒத்திவைப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய மக்களாட்சி முறையல்ல. மறைந்த அரசுத் தலைவர் ஜெயவர்தனவின் ஆட்சியின் கீழ் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன, அது ஒரு கிளர்ச்சிக்கு வழிவகுத்தது, மக்களாட்சி அமைப்புகளைப் பலவீனப்படுத்தியது. உயிரிழப்புகளுக்கும் வழிவகுத்தது. இவற்றையெல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது.






# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு கொடுக்க கடும் எதிர்ப்பு

## அரசின் அபகரிப்பை ஏற்க மக்கள் மறுப்பு

நடராசா – லோகதயாளன்

யாழ்ப்பாணம் கீரிமலையில் சைவ அடையாளங்கள் மக்கள் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு மகிந்தவினால் அடாத்தாக கட்டப்பட்டது ஜனாதிபதி மாளிகை. 2015இல் ராஜபக்ஷக்கள் தோற்கடிக்கப்பட்டு அதிகாரத்தை இழந்ததை அடுத்து சும்மா கிடந்த இந்த இடம், 2019இல் கோட்டாபய ஜனாதிபதியானதும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. இப்போது அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'நொதேர்ன் யுனி' என்னும் தனியார் முதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்கியிருக்கிறார். நொதேர்ன் யுனி எனப்படும் வடக்கு பல்கலைக்கழத்தின் உரிமையாளர்களில் முதன்மையானவர் தென்னிந்திய நடிகை ரம்பாவின் கணவரான புலம்பெயர் ஈழத் தமிழர்.





கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் ஜே/226 இலக்க கிராம சேவகர் பிரிவில் சைவ அடையாளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களிலேயே இந்த ஜனாதிபதி மாளிகை அமைக் கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள இடம் உள்ளடங்கலா 29 ஏக்கர் நிலத்தை உரிமையாளர்களின் சம்மதம் ஏதுமின்றி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குவழங்குவதாக 2021-09-09 அன்று அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வர்த்தமானி வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான 29 ஏக்கர் நிலத்தில் இருந்து 12 ஏக்கர் நிலம் தற்போது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஊடாக நொதேன் யுனி என்னும்தனியார்பல்கலைக்கழக முதலீட்டாள ருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுவிட்டது.

### 50 வருட குத்தகை

இந்தஇடத்தில்அண்ணளவாக 5 ஆயிரம் பில்லியன் ரூபாய்கள் முதலீட்டில் தகவல் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு திங்கட் கிழமை (16) பத்தரமுல்லயில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இதில்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, தலைவர் இண்டி பத்மநாதன் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் எல். ரத்நாயக்க உட்படப் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் பற்றிய தகவல் வெளியானதைத் தொடர்ந்து அதற்குக் கடும் எதிர்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அந்த இடத்தில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கல்ல, மக்களின் நிலத்தை அபகரித்து இப்படி அரசு பணம் சம்பாதிப்பதற்கு எதிராகவே கடும் எதிர்ப்புக் காட்டப்படுகின்றது.

நிலத்தின்உரிமையாளர்களும் அந்தப் பகுதியில் அமைந்திருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவ ஆலயங்களின் தர்ம கர்த்தாக்களும் அரசின் இந்தச் செயலுக்கு உடனடியாகவே தமது கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளனர். இதுசர்வதேசநியமங்களிற்கும் முரணானது என்ற வகையில் சர்வதேசமும் இது தொடர்பில் தமது கரிசணையை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

### இந்து மா மன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம் – கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் ஒப்படைக்கக் கூடாது என அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

கீரிமலை காங்கேசன்துறை வீதியில்உள்ள அரசமாளிகையும் அச்சுற்றாடலில் அழிக்கப்பட்ட சைவ ஆலயங்கள், மடங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த கீரிமலை ஆதிச்சிவன் கோயில், சடைய-ம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோவில் போன்றவை இடிக்கப் பட்டு அச்சுற்றாடலில் கட்டப்பட்ட அரச அதிபர் மாளிகை பயனற்று உள்ளது.

இந்த அரச மாளிகையை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்கவேண்டும். ஆதிச்சிவன் கோயில் மடங்கள் இருந்த இடத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதை விடுத்து தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் இவற்றை ஒப்படைக்கக்கூடாது. இது தனியார் நிலங்களிலும் சைவ சமய நிறுவனங்களின் நிலங்களிலும் போரை பயன் படுத்தி அபகரிக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்டது.

கடந்த முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பொதுமக்கள் போகமுடியாமல் கடற்படையின் பொறுப்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது மிக வேதனையான விடயம்.

இப்பகுதியில் இருந்த சித்தர்களின் சமாதிகள் பல உடைக்கப்பட்டு விட்டன. இது நாட்டுக்கு கெடுதியானது. எனவே அந்தச் சமாதிகள் இருந்த இடங்களை உடனடியாக உரிய-வர்களிடம் ஒப்படைக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் வாணிப நிறுவனங்களுக்குக் கையளிக்கக்கூடாது.

இது திட்டமிட்ட அநியாய செயற்பாடு. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். காங்கேசன்துறை பலாலி வீதியில் சிவபூமி அறக்கட்டளைக்கு உரித்தான சுக்கிரவார திரு கோணசத்திரம் இராணுவ நலன்புரிச்சங்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, தல்செவன ஹோட்டல் என்ற பெயரில் ஆடம்பர விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. .

நூற்றியாறு பரப்பு கொண்ட சைவ சமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டலாகப் பயன்படுத்தி அட்டூழியம் செய்கிறார்கள். இது நீதியற்ற செயல். உடனடியாக தல்செவன ஹோட்டலின் பயன்பாட்டில் உள்ள சமய நிறுவனத்தின் நிலம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஆறு திருமுருகன் தனது கண்டன அறிக்கையில் கடுமையாகத் தெரிவித்துள்ளார்.

அதற்குக் காரணம் வரலாற்று

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

முக்கியத்துவம் மிக்க 7 சைவ (ஆலய) அடையாளங்களை அழித்தே கீரிமலை ஜனாதிபதி மாளிகையை அமைத்தனர். மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களை இடித்து அழித்து அந்த இடத்திலேயே ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ள விடயம் அண்மையிலேயே மக் களுக்குத் தெரியவந்தது.

கீரீமலையில் மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம், சடை யம்மா மடம், கதிர்காமத்திற்கு யாத்திரை தொடங்கும் முருகன் ஆலயம் என்பன அமைந்திருந்த இடங்கள் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டே மகிந்த தனக்கு ஆடம்பர மாளிகை அமைத்தார் எனப் பலரும் தொடக்கத்திலேயே குற்றம் சாட்டியபோதும் அதனை உறுதிப்படுத்த முடியாமல் போனது. ஆனால் தற்போது அது ஆதாரத்தோடு வெளிவந்துள்ளது.





வலி. வடக்கு கீரிமலைப் பகுதியில் இருந்த சிவன் ஆலயம் அருகே கிருஸ்ணன் ஆலயம் ஒன்றும் இருந்தது. இந்த ஆலயத்தின் ஆலய நிர்வாகத்தினர் சிலர் மார்ச் 2 அன்று கடற்படையினரின் அனுமதியுடன் பாதுகாப்பு வலயத்திற்குள் சென்று கிருஸ்ணர் ஆலயத்தின் தற்போதைய நிலையைப் பார்வையிட்டுள்ளனர்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகத்தினர் 1990ஆம் ஆண்டின் பிற்பாடு, முதல் தடவையாக அப்போதுதான் ஆலயத்தைப் பார்வையிட்டனர். அங்கு சென்ற ஆலய பரிபாலனசபையினருடன் அப்பகுதி கிராம சேவகரும் சென்றிருந்தார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவன் ஆலயம் இருந்த தடயமே தெரியாது இடித்து அடியோடு அழிக்கப்பட்டே மகிந்த ராஜபக்சவின் காலத்தில் உல்லாச விடுதி அமைக்கப்பட்டுள்ளது என்கிற விவரம் அப்போது தெரியவந்தது. அங்கு சென்று திரும்பிய கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கதிரவேலு நாகராசா அதனை உறுதி செய்தார். சிவன் கோவிலின் தடயமே இப்போது இல்லை என்றும் கூறினார்.

கிருஸ்ணர் ஆலய நிர்வாகம் சென்று வந்த பின்பு அப்பகுதிக்குச் சென்று திரும்பிய அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உபதலைவர் ஆறு. திருமுருகன் தனது கண்டனத்தை பதிவு செய்யும்போது



போர்த்துக்கீசர் காலத்து ஆதிசிவன் ஆலயத்தில் பாதாள கங்கை எனப்படும் கிணற்றுடன் கூடிய சிவன் ஆலயம், அதன் அருகே சித்தர்களின் தியான மடம், அதிலே நல்லூர் தேரடிச் சித்தரான சடையம்மாவின் சமாதி மற்றும் அவரது மடம் ஆகியவையும் இருந்தன என்று தெரிவித்திருந்தார்.

அது மட்டுமின்றி அந்த பிரதேசமே இந்துக்களின் புனித பூமியாக திகழ்ந்ததற்கு ஏராளமான சான்றுகளையும் அவர் வெளிப்படுத்தினார்.

நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் குருவான சங்கர சுப்பையாவின் சமாதியும் அங்கே இருந்தது. அதேபோன்று மிகவும் பழமையான கதிரை ஆண்டவர் ஆலயமும் இருந்தது. இவ்வாறான ஆண்மீக அடையாளங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும் என்பதோடு அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம் என்று அவர் உடனடியாகவே ஓர் அறிக்கையையும் வெளியிட்டிருந்தார்.

இதேநேரம் இப்பகுதியில் அமைந்திருந்த கதிரை ஆண்டவர் ஆலயத்தின் மதகுருவாக இருந்த 71 வயதான கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் கணேசமூர்த்தி சர்மாவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

கதிரைமலை முருகன் ஆலயத்திற்கு எனது குடும்பத்திலிருந்து மூன்றாம் தலைமுறை ஆளாக நான் பூசை செய்து வந்தேன். இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியாக வேல் இருந்தது. பண்டயகால சிற்ப முறையிலே அமைக்கப்பட்ட ஆலயம் இது. அதனோடு குருக்கள் தங்குமிடம், மடப்பள்ளி மட்டுமன்றி 3 கேணிகள் ஒன்றாக காணப்பட்டன. அதேநேரம் இந்த ஆலயம் கடற்கரையோடு ஒட்டியிருந்தபோதும் இந்த ஆலயத்திற்கு அப்பால் இருந்த கிணற்று நீரே உவராக இருந்தது. எனினும் ஆலயத்தின் கேணியிலிருந்த நீர் நன்னீராகவே இருந்ததால் அயலவர்களின் பாவனைக்கும் பெரிதும் உதவியது. இந்தப் பிரதேசம் அனைத்து சைவ மரபுகளோடு இருந்தமையால் திருச்செந்தூரை ஒத்த வடிவில் அமைக்க கனவு கண்டோம் அது வெறும் கனவாகவே போய்விடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. ஏனெனில் இந்தப் பிரதேசம் மீண்டும் விடுவிக்கப்படுமா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமும் அவை இருக்கின்றனவா இல்லையா என்ற அச்சம் மறுபுறமும் எம்மை சூழ்கின்றது. என்கின்றார்.

இப்பிரதேச நிலத்தை அரசு சுவீகரிக்க முற்பட்டபோதெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம். ஆனால் 38ஏ யின் கீழ் பிரதேச செயலாளர் சுவீகரித்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க நகர அபிவிருத்தி அதிகார சபை ஓர் முதலீட்டு நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்க ஒப்பந்தம் இடப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்ட விரோதமாக வழங்கும் இடம் தொடர்பில் நாம் எமது மக்கள் மற்றும் ஆலய சபைகளின் கோரிக்கையின பெயரில் நீதிமன்றின் ஊடாக தடையைப் பெற முயற்சிக்கின்றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இப்படி மக்களின் காணிகளை அபகரித்து அதில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முயலும் அரசின் சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிர்ப்பு மட்டுமே மிஞ்சும். மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த இடத்தில் எந்தவொரு நிறுவனமும் முதலிடுவது கடினமான காரியமே.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில்அரசாங்கம்உள்ளதுஎனநாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

'உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் பிற்போட்டு, அரசாங்கம் ஏற்கனவே மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளது.

இந்த நிலையில், அடுத்தாண்டு செப்டம்பரில் ஜனாதிபதித்தேர்தலைநடத்தவேண்டியகட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

எனவே, இந்தத் தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை.

இதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டால் நாம் அனைத்து தரப்பினருடனும் ஒன்றிணைந்து எதிர்ப்பினை வெளியிடுவோம்.

அரசாங்கத்திற்கு தேர்தல் ஒன்று தேவையில்லாமல்இருக்கலாம். ஆனால்மக்கள்தேர்தலொன்றை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறார்கள்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# தம்பியைக் கத்தியால் குத்தி கொன்ற அண்ணன் கைது

## கிருலப்பனையில் சம்பவம்

கிருலப்பனைபிரதேசத்தில்இளையசகோதரனை கத்தியால் குத்தி கொலை செய்த மூத்த சகோதரன் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்டநபர்ஐஸ்மற்றும்ஏனைய போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஒருவர் ஆவார்.

இந்நிலையில் இவர் தனது தாயிடம் பணம் கேட்டு வாக்குவாதம் செய்த காரணமாக ஏற்பட்ட மோதலில் சந்தேக நபர் வீட்டில் இருந்த மரக்கறி வெட்டும் கத்தியால் இளைய சகோதரனின் மார்பில் குத்தி கொலை செய்துள்ளார்.

இவ்வாறுகொலைசெய்யப்பட்டவர் கிருலப்பனை பிரதேசத்தில் ஹைலெவல் வீதியைச் சேர்ந்த ஆர்.ஏ. அமில சந்தருவன் என்ற 29 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

32 வயதுடைய சந்தேக நபரான மூத்த சகோதரனை பொலிஸார் கத்தியுடன் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கிருலப்பனை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)

## நவராத்திரி சிறப்பம்சம்

# அருளான இலக்குமியே அடிபணிந்தேன் அம்மா





சங்கநிதி பதுமநிதி தந்திடு தாயே
சஞ்சல மணுகாமல் காத்திடுவாய் நீயே
பஞ்சமெனும் இருள்சூழா பார்த்திடுவாய் தாயே
பாதமலர் சரணடைந்தோம் பராபரமே உன்னை

உணவோடு உடையுறைள் உவந்தளிப்பாய் தாயே
உலகோர்கள் இகழாமால் வாழ்வளிப்பாய் தாயே
அளவோடு செல்வமதை அளித்திடுவாய் தாயே
ஆசையது பெருகாமல் பார்த்துவிடு அம்மா

பொருளில்லார்க் கிவ்வுலகு இல்லையாம் அம்மா
பொருளீய்ந்து எந்தனைக் காத்திடுவாய் அம்மா
பொருளோடு ஈகையையும் மனமமரச் செய்வாய்
அருளான இலக்குமியே அடிபணிந்தேன் அம்மா

இருப்பாரும் இல்லாரும் தேடுகிறார் தாயே
எவரெவர்க்கு எதுவேண்டும் என்பதை நீயறிவாய்
கொடுக்கின்ற தருணமதில் கொடுத்துமே உயர்வாய்
கோணாத குணமதனை தந்திடுவாய் அம்மா

பொருளும் அருளும் ஒன்றாய் இணைய
கருணை புரிவாய் இலக்குமித் தாயே
தருமம் உலகில் தழைக்க அருள்வாய்
தனமாய் ஒளிரும் இலக்குமித் தாயே

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




தொடர்புகளுக்கு: 0777 43 5557

# நெல்லூரில் யானைகள் அட்டகாசம் மயிரிழையில் உயிர் பிழைத்த ஐவர்




மட்டக்களப்பு நெல்லூர் பகுதியில் உள்ள குடியிருப்புகள் மீது நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை காட்டுயானைகள் சில தாக்குதல் நடத்தியுள்ளதோடு அங்கிருந்த மரங்களையும் சேதப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது யானையின் தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட்ட ஐவர் மயிரிழையில் உயிர் பிழைத்துள்ளனர் எனவும், இரு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வீடின்றி நிர்க்கதியாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



## பிரபல தயாரிப்பாளர் புத்தி கீர்த்திசேன காலமானார்!

பழம்பெரும் திரைப்பட தயாரிப்பாளரான கலாநிதி புத்திகீர்த்திசேன நேற்று காலைதனது 83ஆவது வயதில் காலமானார்.

இந்நிலையில் அவரதுபூதவுடல்நாளை (வியாழக்கிழமை)வரை கொழும்பில் உள்ள அவரது வீட்டில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சனிக்கிழமை கொஸ்வாடியா மயானத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## நாடாளுமன்றை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் செய்யும் நோக்கிலும் நிலையியற் கட்டளை 27 பிரிவு 2 கீழ் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கும் அதற்குப் பதில் வழங்குவதற்குமாக 15நிமிடங்கள் மாத்திரம் வரையறுக்க இறுதியாக இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபைக்கு அறிவிப்புச் செய்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய எதிர்க்கட்சிபிரதமகொறடாலக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்றத்தில் அவ்வாறு நேரத்தை வரையறை செய்வது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது கலந்துரையாடி இருந்தோம். ஆனால் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.

அதனால் நிலையியற் கட்டளையில் இல்லாத ஒன்றை மேற்கொண்டு இந்த நாடாளுமன்றத்தை கட்சிக் காரியாலயமாக்கவோ கச்சேரியாக்கவோ வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன், முடியுமானவரை நேரத்தை கட்டுப்படுத்திக்கொள்ளும் விடயத்துக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க தயார் என்றார்.

இதன்போது எழுந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில்ஸ்ரீலங்காசுதந்திரகட்சி உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவருகிறது. எமக்குஎப்போதும் 7,8 நிமிடங்களே உரையாற்ற நேரம் வழங்கப்படுகிறது. அதனால் நேரத்தை கட்டுப்படுத்துவதற்காக சபாநாயகர் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்கிறோம் என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகையில், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்வாறானதொரு தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் இந்த வாரம் இடம்பெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பாக மேலும் ஆராய்ந்து, இறுதி தீர்மானத்துக்கு வவருவோம் என்றார்.

அதற்கு சபாநாயகர் தற்போது நான் தீர்மானத்தை அறிவித்துள்ளேன் அதில் மாற்றம் ஏற்படுத்துவதாக இருந்தால் அடுத்த கட்சிதலைவர்கள் கூட்டத்தின்போது கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்ளலாம் - என்றார்.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த கடிதத்தில் விடயங்களை முன்வைத்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுடன் சிரேஷ்ட இராணுவ புலனாய்வு அதிகாரிகள், சில அரசியல் வாதிகளுக்கு தொடர்பு இருப்பதாக சனல்- 4 நிகழ்ச்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா ஓய்வு பெற்று செல்லும் சந்தர்ப்பத்தில் தாக்குதலுக்கு பின்னால் பெரும் சூழ்ச்சி காணப்படுவதாகவும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌஃபர் மௌலவி எனக்கூறி விட முடியாது எனவும் கூறிய விடயம் செப்டம்பர் 8 நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஒலிப்பதிவினைக் காண்பித்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு சனல்-4 கூறியுள்ள விடயங்களுக்குஅமைய அதிகாரிகள், அரசியல்வாதிகள் பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்களா என்பதைக் கண்டறிந்து, இதுவரை பொலிஸார் நடத்திய விசாரணைகளை ஆய்வு செய்துபாராளுமன்றத்தில்அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறித்தபாராளுமன்றஉறுப்பினர்கள் தெரிவுக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, உத்தேசதெரிவுக் குழுவின் யோசனைகளுக்கு ஆதரவளிப்பதாயின், சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனஎதிர்க்கட்சித்தலைவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா காலமானார்



முன்னாள் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா தனது 75 ஆவது வயதில் திங்கட்கிழமை காலமானார். 4 பிள்ளைகளின் தந்தையான விக்டர் பெரேரா, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கள் பிற்பகல் காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி 30ஆவது பொலிஸ் மா அதிபராகப் பதவி உயர்வு பெற்று 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03 ஆம் திகதி வரை கடமையாற் றிய நிலையில், அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

விக்டர்பெரேராவடமாகாணத்தின் முதலாவது ஆளு நராகவும் கடமையாற்றிய அதேவேளை, மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் முன்னாள் பொலிஸ் மா அதிபரும் ஆவார்.(05)


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









# மலையக சமூகத்தை பிளவுபடுத்தும் நோக்கில் தேர்தலுக்கு வரும் போலிகளை நம்ப முடியாது

## ராமேஷ்வரன் எச்சரிக்கை



"மலையகத்தில் சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசியல் வாதிகள் தடையாக உள்ளனர் என ஒருவர் (முத்தையா முரளிதரன்) கூறியுள்ளார். அவரை வரவேண்டாம்எனசொன்னதுயார்?மக்களுக்கு சேவை செய்ய முன்வாருங்கள், நாங்களே மாலைபோட்டு வரவேற்பளிக்கின்றோம்." -என்று இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஆனால் தேர்தல் காலத்தில் வாக்குக்காக மட்டும் தானே எவரையாவது அழைத்துக்கொண்டு வருகின்றீர்கள், தேர்தல் முடிந்ததும் எங்களையும் கஷ்டத்தில் தள்ளி விட்டு, காணாமல் போய் விடுகின்றீர்கள் எனவும் அவர் கூறினார்.

'சிறுவர்களுக்கான கனவுகள்' என்ற வேலை திட்டத்தின் கீழ் அவர்களின் நலன் கருதி பூண்டுலோயா பேர்லன்ஸ் தோட்டம் ஹெரோ பிரிவில், தலவாக்கலை லோகி தோட்டம், அக்கரகந்தை பெசிபன்தோட்டம்,இராகலைபிரம்லி தோட்டம், இராகலை தோட்டம் மத்திய பிரிவு, இராகலை லிடஸ்டேல் தோட்டம் ஆகிய பகுதிகளில் நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரனின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஊடாக உலக வங்கியின் அனுசரணையுடனும், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையில், நிறுவப்பட்ட நவீன தொழில்நுட்பம்கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் குழந்தைகளின் சுகாதாரம் கல்வி அபிவிருத்தி மற்றும் அவர்களுடைய ஆக்க திறன்களை விருத்தி செய்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், உப தலைவர் பிலிப், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி செயலாளர் எம்.எஸ்.செல்லமுத்து, நுவரெலியாபிரதேசசபைமுன்னாள் தலைவர் வேலு யோகராஜ், பிரதேச சபை உறுப்பினர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நுவரெலியா மாவட்ட பணிப்பளார் ரஞ்சன் மற்றும் அதிகாரிகள், தோட்ட முகாமையாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், இளைஞர், யுவதிகள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு -

'மலையகத்தில்பலஅரசசார்பற்ற நிறுவனங்கள் சேவைகளை முன்னெடுக்கின்றன, அவற்றுக்கு எவரும் தடை ஏற்படுத்தவில்லை. மலையகத்துக்கு சேவை செய்ய முன்வருபவர்களாக இருந்தால் நாம் நிச்சயம் வரவேற்போம். ஆனால் எமது சமூகத்தை பிளவுபடுத்தும் நோக்கில் தேர்தல் காலத்தில் மட்டும் வரும் போலிகளை நம்ப முடியாது. தோட்டப்பகுதிக்கு வந்து பார்த்தால்தான் காங்கிரஸ் முன்னெடுத்தசேவைகள்தெரியும். மக்களுக்குதேவையானசேவைகளை அன்றுமுதல்இன்றுவரைகாங்கிரஸ் வழங்கி வருகின்றது.

இந்த நிலையத்தை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டபோது ஒரு கோடி ரூபா மதிப்பிடப்பட்டது, ஆனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையால் ஏற்பட்ட மாற்றங்களால் அதனை முன்னெடுக்க இரண்டரை கோடி ரூபா தேவைப்பட்டது, அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் அதற்கான ஒதுக்கீடுகளை எமது அமைச்சர் ஜீவன் தொண்டமான் வழங்கியுள்ளார். விலை அதிகரிப்பு என்பதற்காக நாம் திட்டங்களைக் கைவிடவில்லை. அதேபோல இந்தியா வழங்கவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டமும்முன்னெடுக்கப்பட்டது, அத்திட்டத்துக்கும் ஆரம்பத்தில் 9 லட்சம் ரூபா மதிப்பிட்டப்படது, பின்னர் 28 லட்சம் ரூபா தேவைப்பட்டது, அதற்கானஒப்பந்தமும்அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. மேலும் பல திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை வழங்க எமது அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். எனவே, ஜனவரி ஆகும்போது திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும். எமது சமூகத்துக்கு ஒற்றுமை அவசியம். மக்களுக்கானபொதுபிரச்சினையின் போது இணைந்து செயற்பட தொழிற்சங்கங்கள்முன்வந்துள்ளன. அண்மையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற சந்திப்பில் இணக்கம் எட்டப்பட்டது. - என்றார். (05)

# பொதுக்கொள்கையுடன் ஒன்றிணையவேண்டும்

## எதிர்க்கட்சிகளுக்கு பீரிஸ் அறைகூவல்

நிறைவேற்றுத்துறை அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச்செய்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பிற்போட அரசாங்கம் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

2025 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தலை நடத்தாமல் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இடமளிக்க முடியாது.நாட்டு மக்களின் வாக்குரிமையை வென்றெடுக்க சகல எதிர்க்கட்சிகளும் பொதுக் கொள்கை வகுப்புடன் செயற்பட ஒன்றிணைய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பால் நாட்டு மக்கள் பெரும் துயரத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களின் கவனத்தை திசைத்திருப்பி விட்டு சுயநலமான செயற்பாடுகளை மிகவும் சூட்சமமான முறையில் முன்னெடுக்கஅரசாங்கம்அவதானம்செலுத்தியுள்ளது.

தமக்கான அரசாங்கத்தை தெரிவுசெய்ய தமக்கு வாய்ப்பளிக்குமாறு மக்கள் வலியுறுத்துகின்ற நிலையில் அரசமைப்பு திருத்தம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கம் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் என்பன குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டுக்கு பொருத்தமான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இரத்து செய்யபப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் இவற்றை செயற்படுத்த மக்களாணை அத்தியாவசியமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தற்போதைய நாடாளுமன்றத்துக்கும் மக்களாணை கிடையாது என்பது முழு உலகமும் அறிந்த விடயம் 2020.08.03 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு பின்னர் இந்த நாட்டில் எமது அரசியல் பயணத்தில் இடம்பெறாத பல சம்பவங்கள் பதிவாகின.

69 லட்ச மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் விரட்டியடித்தார்கள். மக்கள் போராட்டத்தால் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை பதவி விலகியது. ஆகவே, தற்போதைய நாடாளுமன்றத்துக்கு மக்களாணை சிறிதேனும் கிடையாது.

நிறைவேற்றுத்துறை அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துசெய்வது இலகுவானதொரு விடயமல்ல. 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பிரதான அம்சமாகக் கருதப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சுயாதீன ஆணைக்குழுக்கள், மாகாண ஆளுநர், அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், அமைச்சரவை, அரச நிர்வாகம், நீதிமன்ற கட்டமைப்பு ஆகிய விடயதானங்களுடன் நேரடியாகத் தொடர்புப்பட்டுள்ளது. ஆகவே நிறைவேற்றுத்துறை அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு அமைய மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டும் என்ற உண்மை நோக்கம் ஜனாதிபதிக்கு காணப்படுமாயின் அவர் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை உடன் நடத்தி நிலையான அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

மக்களாணைக்கு செல்லாமல் அரசமைப்பில் வார்த்தை பிரயோகங்கள் ஊடாக திருத்தம் செய்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்தால் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறாது.

நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் 2025.08 ஆம் மாதத்துக்கு பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். பொதுத்தேர்தலையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைக்கு யோசனை முன்வைத்துள்ளார்.

தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் யோசனையை முன்வைத்து, பின்னர் அதனை ஆராய குழு நியமித்து தேர்தலை பிற்போடுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். தேர்தல் சட்டம் திருத்தம் என்று குறிப்பிட்டுக் கொண்டு தான் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையே பொதுத்தேர்தலுக்கும் ஏற்படும்.

தேர்தலை பிற்போடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என பொதுஜன பெரமுன குறிப்பிடுகிறது.ஆனால் தேர்தலுக்கு தடையாக ஜனாதிபதி எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகிறது. மக்களாணை மீது உண்மையான மதிப்பு இருக்குமாயின் தேர்தலுக்காக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் செயற்பாடுகளில் பொதுஜன பெரமுன பங்குதாரராக வேண்டும். - என்றார். (05)

# நாட்டில் இஸ்லாமிய இனவாத தீவிரவாத அலையை முஸ்லிம் அரசியல்வாதிகள் கட்டியெழுப்ப முயற்சி

## டானிஷ் அலி சாடல்

தற்போது காசா பகுதியில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே போர் மோதல்கள் நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் இதனை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இந்த நாட்டில் இஸ்லாமிய இனவாத மற்றும் தீவிரவாத அலையை கட்டியெழுப்ப முற்படுவதை நாம் காண்கிறோம்.

அத்துடன் முன்னிலை சோலிசகட்சி உட்பட பல இடதுசாரி அரசியல் கட்சிகள் காஸா மோதல் என்ற போர்வையில் இந்நாட்டு முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்காக செயற்பட்டு வருகின்றன என தீவிர ஜனநாயக சக்தியின் தலைவர் டானிஷ் அலி கொழும் பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தார். (05)

# மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுப்பது சட்டவிரோதம்

## ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டு



மின் உற்பத்திக்கான செலவீனங்கள் குறைந்திருக்கின்றது என்றும் ஒரு வருடத்தில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிக்க கோரிக்கை விடுப்பதானது சட்டவிரோதசெயல்என்றும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கதெரிவித்துள்ளார்.

கொழும்பில்இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மூன்றாவது முறையாகவும் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மின்சார சபை முன்வைக்கக் கூடாது.

சட்டமூலங்களுக்கு அமைவாக வருடத்தில் இரண்டு முறை மட்டுமே மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும்.

இந்தநடைமுறைக்குஅப்பால்மின் கட்டணத்தை 22 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை சட்டவிரோதமானது.

மின் கட்டண அதிகரிப்பிற்கான காரணங்களாக மின்சாரத்துக்கான கேள்வி அதிகரித்திருக்கின்றது என்றும் மின் உற்பத்தி செலவு அதிகரித்திருக்கின்றது என்றும் மின்சார சபை கூறுகின்றது.

மின்சார கேள்வி அதிகரிப்பு தொடர்பான அறிக்கைகளை பொது பயன்பாட்டு ஆணைக்குழு கோரியிருந்தது.

தற்போது வரையில் அது கிடைக்கப்பெறவில்லை. எதிர்வரும் மூன்றுமாதங்களுக்கானமின்உற்பத்தி செலவீனங்களைஈடுசெய்வதற்காகவே மின்சார சபை கட்டண அதிகரிப்பை கோரியிருக்கின்றது.

ஆனால் தற்போது அந்த நிலை மாறியிருக்கின்றது.

எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின்படி நீர் மின் உற்பத்திக்கு தேவையான நீர் வளம் இருக்கின்றது.

அதே நேரம் அணல் மின் உற்பத்திற்கு தேவையான மூலப்பொருள்களின் விலைகளும் உலக சந்தையில் குறைவடைந்துள்ளன.

இந்த காலப்பகுதியில் மின்சாரத்திற்கான கேள்வியும் குறைந்தே காணப்படுகின்றது. ஆகவே மின் கட்டண அதிகரிப்பு ஒன்று தேவையே இல்லை.

என்னுடைய கணக்கெடுப்பின்படி இந்த வருட இறுதியில் இலங்கை மின்சாரசபையானதுமின்கட்டணத்தை அதிகரித்தாலும் அதிகரிக்கா விட்டாலும் 30 பில்லியன் இலாபத்தை பெறும். -என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA


ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்

## வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத்தில்











லயன்ஸ்கழகங்களின்ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் சுன்னாகத்தில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது.

லயன்ஸ் கழக வெள்ளைப் பிரம்புதினமாவட்டஇணைப்பாளர் லயன்மகாதேவாபிரிதுவிராஜாவின் ஒழுங்கமைப்பில் ஆளுநர்சபை ஆலோசகர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குலயன்ஸ்கழகமாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம். பீற்றர் - சாவித்திரி தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். வெள்ளைப்பிரம்புதினவிழிப்புணர்வுப்பேரணிகாலை 9 மணிக்கு சுன்னாகம் கொமர்சல் வங்கிக்கு முன்பாக ஆரம்பித்து, சுன்னாகம் பஸ் நிலையத்தைச் சென்றடைந்து அங்கு வெள்ளைப் பிரம்புதொடர்பானவிழிப்புணர்வு உரை வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரனால் ஆற்றப்பட்டு மீண்டும் பேரணி புறப்பட்;டு வாழ்வகத்தைச் சென்றடைந்து அங்கு பொதுக்கூட்டமும் சேவைத் திட்டங்களும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முன்னாள் ஆளுநர் ஆர்.எல்.ராஜ்குமார், ஆளுநர்சபை செயலாளர் பிரனித் பீரிஸ் உட்பட 100 இற்கு மேற்பட்ட லயன்ஸ்கள் கலந்துகொண்டனர்.

இந்த வெள்ளைப் பிரம்புக்கு சர்வதேச ரீதியில் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது அமெரிக்காவில் உள்ள லயன்ஸ் கழகத்தினரே என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் வேகமாக பரவும் கண்நோய்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கண் நோய் தற்போது வேகமாக பரவி வருகின்றது. இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறித்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அதில், வேகமாக பரவிவரும் 'கண் நோயிலிருந்து எம்மை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மு.மலரவன் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இந்தக் கண்நோய் 70 வீதமானவர்களுக்கு ஒரு கண்ணில் வந்தால் மற்றைய கண்ணிலும் வரும். வீட்டில் உள்ள ஒருவருக்கு இந்தக் கண்நோய் வரும் பட்சத்தில் 25 வீதம் வீட்டிலுள்ள ஏனையவர்களுக்கும் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது.

குறித்தகண்நோய்நேரடிதொடுகை மூலம் பரவக்கூடியது என்பதால் பாடசாலைகள், அலுவலகங்கள் மறறும் பொதுச்சந்தைகள் போன்ற அதிகளவானவர்கள் கூடும் இடங்களில் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, இந்நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக தீவிரப்படுத்த வேண்டிய ஓர் அவசர தேவை உணரப்படுகின்றது.

இந்த நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் இலகுவானது. பின்வரும் சில சுகாதார நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதன் மூலம் இந்நோய்த்தாக்கத்தை இருவார காலப்பகுதிக்குள் கட்டுப்படுத்த முடியும்.

01. தொற்று ஏற்பட்ட (கண்நோய் ஏற்பட்ட) ஒருவர் பாடசாலைக்கோ அலுவலகத்துக்கோ செல்வதை முற்றாகத் தவிர்த்து சாதாரண தனிமைப்படுத்தலில் அவசியம். கண் சிவப்பு மறைந்து கண்ணில் இருந்து நீர்வடிதல் முற்றாக குணமடைந்த பின்னரே (3-5 நாள்கள் வரை) பாடசாலைக்கோ அலுவலகத்துக்கோ செல்லவேண்டும்.

02. இந்நோய் தொற்றுக்குள்ளான ஒருவர்கண்ணில்இருந்துவரும்நீரை கைகளால்தொட்ட பின்னர் கைகளைக் கழுவாது வேறு ஒருவரையோ ஒரு பொருளையோ தொடுவதை முற்றாகத் தவிர்த்தல் அவசியம்.

03. கண்நோய் ஏற்பட்டவர்களோ அவர்களை பராமரிப்பவர்களோ அன்றி நோய் தொற்று ஏற்படாது முன்னெச்சரிக்கையாக சாதாரண பொது மக்களோ அடிக்கடி கைகளைச் சவர்க்காரமிட்டு நன்றாக கழுவுதல் வேண்டும்.

04. நோய் ஏற்பட்டவர்களும் சரி சாதாரண பொதுமக்களும் சரி எச்சந்தர்ப்பத்திலும்கண்களைக்கசக்கு-வதையோ கண்களை தேவையற்று தொடுவதையோ முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.

05. கண்நோய் பாதிப்புக்குள்ளானவர் பாவித்த டுவாய், தலையணை, உணவுத்தட்டுக்கள், தேநீர் குவளைகள், கட்டில், கதிரை என்பவற்றைபாவிப்பதைமுடிந்தவரை தவிர்த்தல் முடியாத சந்தர்ப்பங்களில் தொற்றுநீக்கி கொண்டு சுத்தம் செய்த பின்னர் பாவித்தல்.

06. கண்களுக்கு லென்ஸ் பாவிப்பவர்கள் நோய் குணமடையும் வரை அதனைப் பாவிப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

07. நீச்சல் தடாகத்திற்கு செல்வதை தொற்றுக்குள்ளானவர்கள் முற்றிலும் தவிர்த்தல் அவசியம்.

08. அடிக்கடி கைகளையும் முகத்தையும் சவர்க்காரமிட்டு கழுவுவதுடன் குளித்து சுத்தமாக இருத்தல் வேண்டும்.

09. கண்நோய் தாக்கம் ஏற்பட்டவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொருமருந்தையும்கண்களுக்கு விடுவதை முற்றிலும் தவிர்த்தல் அவசியம். கண் வைத்தியர் ஒருவரின் ஆலோசனையின்றி ஸ்ரீரோயிட் மருந்துகளோ மருந்துகளையோ உள்ளெடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

10. எனினும் பாதிப்புக்குள்ளான கண்களுக்கு குளிரான ஒத்தடம் மறறும் செயற்கை கண்ணீர் பாவிக்க முடியும்.

எனவே அனைவரும் யாழ். மாவட்டத்தில் இந்தக் கண்நோயின் பரம்பலை இரண்டு மூன்று வாரங்களுக்குள் கட்டுப்படுத்த மேற்கூறிய சுகாதார அறிவுரைகளைப் பின்பற்றுவதன் மூலம் தமது பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது.(05)

# ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்



கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையில் ராகம பகுதியைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு ஆறு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிறந்துள்ளன.

குறித்த ஆறு குழந்தைகளும் ஆண் குழந்தைகள் என வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் அஜித் தண்டநாராயணா உறுதிப்படுத்தியுள்ளளார்.

இலங்கையில் ஒரே பிரசவத்தில் ஆறு ஆண் குழந்தைகள் பிறந்துள்ளமை இதுவே முதல்முறை ஆகும். வைத்தியசாலை மற்றும் பெற்றோருக்கு இது முக்கிய தருணமாகும்.

கடந்த 2021ஆம்ஆண்டுஒக்ரோபர் 21 ஆம் திகதி முதன்முறையாக ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்தன. அதில் மூன்று ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தஅரியமற்றும்விலைமதிப்பற்ற பிறப்புகள் வாழ்க்கையின் அற்புதங்களுக்கும், சுகாதார நிபுணர்களின் அர்ப்பணிப்புக்கும் சான்றாக விளங்குகின்றன. என்றார். (05)

# ஜனாதிபதி தேர்தலையும் பிற்போடும் அரசின் முயற்சியை தோற்கடிப்போம்

## திஸ்ஸ அத்தநாயக்க போர்க்கொடி

நாட்டிலுள்ள உண்மையான பிரச்சினைகளைமறைப்பதற்காகத் தேர்தல்கள் தொடர்பான செய்திகளைஅரசாங்கம்சமூகமயப்படுத்திக் கொண்டிருக்கிறது. மறுபுறம் அடுத்த வருடம் உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமலிருப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்த முயற்சிகளை முறியடித்து நாம்ஆட்சியைக்கைப்பற்றுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதித் தேர்தல் நடத் தப்படமாட்டாது எனப் பரவிவரும் செய்தி தொடர்பில் அரசாங்கம் அதன் தெளிவான நிலைப்பாட்டைஅறிவிக்கவேண்டும். கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நீதித்துறை அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் யோசனையொன்றை முன்வைத்துள்ளார். ஆனால் இது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலோ பேச வேண்டிய நேரம் இல்லை. காரணம் மக்கள் நாளாந்தம்தமதுவாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய போராட்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மறைத்து, தேவையற்ற பேசுபொருளைஅரசாங்கம்சமூகமயப்படுத்திக் கொண்டிருக்கிறது. எவ்வாறிருப்பினும் 2024 நவம்பரில் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்தால் எந்தவொரு காரணத்தைக்கூறியும்தேர்தலைக் காலம் தாழ்த்த முடியாது. மாறாக தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாட்டில் அராஜக நிலைமை ஏற்படும். நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே 2 ஆண்டுகளுக்கு தேர்தல் இல்லை என்று தெரிவித்துள்ளார். அவர்களால் தேர்தல் இன்றி முன்னோக்கிச் செல்ல முடியும். ஆனால் நாட்டு மக்கள் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. அத்தோடு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தேர்தலுக்கான நிதியை கட்டம் கட்டமாக வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் எந்த சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கு தயாராகவே உள்ளது. தேர்தலைக் காலம் தாழ்த்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தையும் நாம் தோற்கடிப்போம். அடுத்த வருடம் நிச்சயம் நாம் ஆட்சியமைப்போம். - என்றார். (05)

# நிறுவன குளியலறை ஜன்னலை இலக்குவைத்து துப்பாக்கி சூடு

## வெலிக்கடையில் சம்பவம்

வெலிக்கடை, பரணகோட்டே வீதி பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என வெலிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுவனத்தின்குளியலறையின் ஜன்னலை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக நிறுவனத்தின் முகாமையாளர் வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இடத்துக்கு அருகிலிருந்து 9 மி.மீ. வெற்று தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜானக ரத்நாயக்கவை கொலை செய்வதைத் தவிர்க்க 15 லட்சம் ரூபாய் கப்பம் கோரிய புளூமண்டல் சங்கா

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவரான கோடீஸ்வரர் ஜானக ரத்நாயக்கவை கொலை செய்வதைத் தவிர்ப்பதற்காக திட்டமிட்ட குற்றக் குழு ஒன்று 15 லட்சம் ரூபாவைகப்பமாககோரியமைதொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். டுபாயில் பதுங்கி வாழும் புளூமண்டல் சங்காவே இந்தக் கப்பத்தை கோரினார் எனத் தெரியவந்துள்ளது.

திங்கட்கிழமை காலை 7.10 மணிக்கும் 9.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் புளூமண்டல் சங்கா என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர், 'தங்களைக் கொலை செய்வதற்காக 80 லட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் ஒன்று தன்னிடம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாதிருக்கத் தனக்கு 15 லட்சம் ரூபா தேவைப்படுகிறது என ஜனக ரத்நாயக்கவிடம் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த அழைப்பின் பிரகாரம் முறைப்பாட்டாளரான ஜனக ரத்நாயக்க தனது அலுவலகத்தில் உள்ள பணத்திலிருந்து 15 லட்சம் ரூபாவை தன்னை அழைத்த நபரிடம் ஒப்படைக்குமாறு பணியாளருக்கு அறிவித்திருந்தார் எனவும் தெரிய வந்துள்ளது. (05)



# 9 கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியிலான போதைப்பொருள் தலைமன்னாரில் மீட்பு

கடற்படையினரால் தலைமன்னார் -உருமலை பிரதேசத்தில் திங்கட்கிழமை அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 4 கிலோ கிராமுக்கும் அதிக ஐஸ் போதைப்பொருள், ஒரு கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 5 கிலோ கிராமுக்கும் அதிக ஹசீஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்குச் சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதிகளில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில்கடற்படையினர்தொடர்ந்து கண்காணிப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பின் போதுசந்தேகத்துக்கிடமானமுறையில் பயணித்துக்கொண்டிருந்தபடகொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. குறித்த படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால்கைப்பற்றப்பட்ட இந்தபோதைப்பொருள்களின்பெறுமதி 94 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். போதைப்பொருள்கள் மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகதலைமன்னார் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்தது. (05)

# அரச வருமானத்தை விடவும் மோசடி மற்றும் ஊழல் அதிகம்

## அசோக் அபேசிங்க சாட்டை

அரசாங்கத்தின் மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக கணக்கு போட்டால் அது அரச வருமானத்தை விட அதிகம் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் அசோக அபேசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளில் அரசின் வருமானம் 2 மில்லியன் கோடி என்றும்அரசவருமானத்தைவிட அதிக ஊழல் மோசடிகள் அரச நிறுவனங்களில் நடந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க கணக்குகள் குழுவின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அசோக அபேசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

100 வருடங்களாக அரசாங்க கணக்குகள் குழு இந்த விடயங்களை ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிவித்த போதும் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ளார்.

அத்தோடுஊழல்செய்தவர்கள் தலைமறைவாக உள்ளனர் எனவும், அடைந்த நஷ்டத்தை மீட்பதற்கோ, வழக்கு தொடரவோ இல்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார். (05)

# யாழில் கசிப்புடன் சந்தேகநபர் கைது!

யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் 10 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறைபொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அனைத்து பணயக் கைதிகளையும் உடன் விடுதலை செய்யவேண்டும்

## இலங்கை வேண்டுகோள்



ஹமாசின்தாக்குதலின்போது பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது. காசாவில் அதிகரிக்கும் வன்முறைகள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ள இலங்கை பண யக்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஹமாஸ்இஸ்ரேலில்பொதுமக்கள் மீது மேற் கொண்ட தாக்குதலை கடுமையாக கண்டிக்கின்றோம் காசாவிற்கு பணயக்கைதிகளாக கொண்டுசெல்லப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பிரியங்க விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உணவு எரிபொருள் மருந்து உட்பட அத்தியாவசியபொருள்கள் காசாவிற்கு சுதந்திரமாக செல்ல அனுமதிக்கப்படவேண்டும். இரு தரப்பும் உயிர் இழப்புகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் இலங்கை வேண்டுகோள் விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார். குஇலங்கை பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் கண்டிக்கின்றது. தங்கள் அர சியல் மற்றும் ஏனைய நோக்கங்களை வன்முறைகள் மூலம் அடைவதற்கு முயல்பவர்கள் உட்பட அனைவரையும் இலங்கை கண்டிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் தீர்மானங்களின் அடிப்படையில் பாலஸ்தீன விவகாரங்களிற்கு முழுமையான பேச்சு மூலமான அரசியல் தீர்வைகாணவேண்டும்என்பதே இலங்கையின் நிலைப்பாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)



# இந்தோனேஷிய ஜனாதிபதியை சந்தித்தார் ரணில் விக்ரமசிங்க

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுவிற்கும் பீஜிங்கில் கலந்துரையாடல் ஒன்று நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இதன்போது அரசியல், கலாசார மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை பெய்ஜிங் சென்றடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அலி சாஹிர் மௌலானா எம்.பியாகச் சத்திய பிரமாணம்: ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவிப்பு

நஸீர்அஹமட்டின்வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்ட அலி சாஹிர் மௌலானா நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாழ்த்துக்களுக்கு மத்தியில் எதிரணியின் பின்வரிசை ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

நீதிமன்ற உத்தரவின்படி நஸீர் அஹமட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அண்மையில் நீக்கப்பட்டது.

இதன்படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டப் பட்டியலில் அடுத்த வேட்பாளராகக் களமிறங்கிய அலி சாஹிர் மௌலானாவை அந்த இடத்துக்கு நியமிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபாய் ஒதுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபாவைஒதுக்குமாறுநிதிஅமைச்சிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

தேர்தல் நடத்தப்படுமானால், குறிப்பிட்ட ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நிதியை ஒதுக்குமாறு நிதியமைச்சிடம் கோருவது பொதுவான நடைமுறை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பொருத்தமான காலத்தில் நடத்தப்படும் என்றும் அந்தக் காலத்திற்குள் தேர்தல்கள் ஆணைக்குழு தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க முன்னதாக தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலை சரியான நேரத்தில் அறிவிக்க தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருந்தாலும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விவகாரங்களில் என்ன நடக்கும் என்பதை அவர்களால் கணிக்க முடியாது என்றும் தெரிவித்திருந்தார். (05)

# அரிசி இல்லையென விவசாயிகள் நாடகம்

*அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து வியாபாரிகளும் விவசாயிகளும் நாடகமாட முயற்சிக்கின்றனர் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.*

*புத்தளத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - எங்களுக்கு அரிசி தட்டுப்பாடு இல்லை. இந்த போகத்தில் போதிய அறுவடை கிடைத்துள்ளது என்பது வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் தெரியும். இதை, ஐந்து மாதங்களுக்கு பயன்படுத்த முடியும் என்பதால், விவசாயிகள் வீடுகளில் வைத்துள்ளனர்.*

*மேலும் ஆலை உரிமையாளர்கள் இவற்றை ஆலைகளில் வைத்துள்ளனர். அதனால்தான் இந்த சிறு பற்றாக்குறை உருவாகிறது. ஆனால் நாட்டுக்குத் தேவையான அரிசியின் அளவு.. அதாவது நம் அனைவருக்கும் தேவையான அரிசி இருக்கிறது. பாஸ்மதியை வெளிநாட்டில் இருந்து கொண்டு வர வேண்டும். கீரி சம்பாருக்கு ஓரளவு தட்டுப்பாடு உள்ளது. மேலும் மற்றைய அரிசி வகைகள் போதுமான அளவு உள்ளன.*

*மேலும், எவ்வளவு மறைத்தாலும் சாதாரண நிலை அரிசி கட்டுப்பாட்டு விலையை தாண்டி செல்ல அனுமதிக்க மாட்டோம். அது கட்டுப்பாட்டு விலைக்கு கீழே பராமரிக்கப்படும்' இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (05)*

# வெளிநாடு அனுப்புவதாக 80 லட்சம் ரூபா மோசடி

## யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இளைஞர் ஒருவரிடம் 80 லட்சம் ரூபா மோசடி செய்த யாழ்பாணத்தைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு அம்பாறை பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞனை மேசடி செய்துள்ளார். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப் பாட்டினையடுத்து, குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2023இல் வெளியிடப்பெற்றது.